


22. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு.நரேந்திரமோடி தென்னாப்பிரிக்கா ஜோஹன்னஸ்பர்க்கில் ஜி-20 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.
- மதுரை, கோவை, மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர்
  திரு. மு.க. ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.
- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவங்களை பூர்த்தி செய்வதற்கான சிறப்பு உதவி முகாம்கள் மாநிலத்தின் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.
- ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டிக்கு லக்ஷ்யாசென் முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை எட்ட, ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் பகவான் ஸ்ரீசத்யசாய் பாபாவின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில் இன்று பங்கேற்ற அவர், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் திறன்கள் மற்றும் வலிமைகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி தென்னாப்பிரிக்கா ஜோஹன்னஸ்பர்க்கில் ஜி-20 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

ஒற்றுமை, சமத்துவம், நீடித்த நிலைத்தன்மை என்பதை கருப்பொருளாக கொண்டு நடைபெறும் இந்த மாநாட்டின் அனைத்து அமர்வுகளிலும் பிரதமர் கலந்துகொள்கிறார்.

மக்கள் யாரும் விடுபடாத வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பில் இன்றைய முதல் அமர்வு இடம்பெறுகிறது.

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் ஜி-20 இந்தியாவின் தலைமைத்துவத்தை மாதிரியாக கொண்டு தொலைநோக்கு பார்வையுடன் தீர்க்கமான அணுகுமுறையுடன் இம்மாநாடு நடைபெறுகிறது.

வசுதெய்வ குடும்பகம் என்பதை முன்னெடுத்துச் செல்லும் ஒரே பூமி ! ஒரே குடும்பம் ! ஒரே எதிர்காலம் ! என்ற பிரதமரின் தத்துவத்துடன் கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையிலான சிறப்பு நடைமுறைகளுக்கான பாதையை இந்தியா இதில் வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 128-வது முறையாக வரும் 30-ம் தேதி பிரதமர் உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெறவேண்டிய தங்கள் கருத்துக்கள் மற்றும் வெற்றி பயணங்களை பொதுமக்கள் நமோ செயலி, mygov இணையதளம் உள்ளிட்டவற்றில் வரும் 28-ம் தேதிவரை தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

ஒரே பாரதம் ! உன்னத பாரதம், வளர்ச்சியடைந்த, சுயசார்பு இந்தியா இலக்கை எட்டும் வகையில் இளைஞர்களுக்கு இதுதொடர்பான உத்வேகத்தை வழங்குவது சர்சார் வல்லப்பாய் பட்டேலுக்கு நாம் வழங்கும் மரியாதை என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வல்லப்பாய் பட்டேலின் 150-வது பிறந்தநாள் ஆண்டு கொண்டாட்டங்களில் ஒருபகுதியாக ஒற்றுமை பேரணியை தொடங்கி வைத்து பேசியஅவர், சர்தார் பட்டேலின் கலாச்சார மரபை முன்னெடுத்துச் செல்லும் வகையில் நாடெங்கிலும் இன்று சிறப்பு பேரணி நடைபெறுவதாக கூறினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சர்தார் வல்லப்பாய் பட்டேலின் பிறந்த இடத்தில் ஒருங்கிணையும் 5 ஒற்றுமை பேரணியினர் அங்கிருந்து 10 நாள் பாதயாத்திரையாக ஒற்றுமை சிலை அமைந்துள்ள குஜராத் மாநிலம் கெவாடியாவிற்கு ஊர்வலமாக செல்வார்கள் என்று திரு.நட்டா கூறினார்.

நாகை வேதாரண்யத்திலும் எனது பாரதம் அமைப்பின் சார்பில் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்ற ஒற்றுமை விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

மத்திய அரசின் 4 புதிய தொழிலாளர் சட்டங்கள் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதாக மத்திய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் பெண்களின் நலன் பாதுகாக்கப்படுவதுடன் மாநிலங்களுக்கு புலம் பெயரும் தொழிலாளர்கள் அரசின் நலத்திட்ட உதவிகளை பெற வகை செய்வதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் மத்திய அரசின் தொழிலாளர் நல சட்டங்கள் மகளிருக்கு பயனளிப்பதோடு ஓய்வூதியத்திற்கும் வகை

செய்வதாக வேலூர் மற்றும் அரியலூரை சேர்ந்த தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் மதுரை, கோவை, மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதிய கடிதத்தில் இதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை மீண்டும் பரிசீலிக்க சம்மந்தப்பட்ட துறைகளை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

20 லட்சம் மக்கள் தொகை அடிப்படையில் மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற அமைச்சகம் மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்திருப்பதை சுட்டிக்காட்டிய முதலமைச்சர், தொழில்துறை மற்றும் கலாச்சார நகரங்களான கோவையிலும், மதுரையிலும், அதிக திறன்கொண்ட பொது போக்குவரத்து மாற்றுகள் தேவைப்படுவதாக குறிப்பிட்டார்

தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் இப்பகுதி மக்களின் தேவையை கருத்தில் கொண்டு மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படவேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவங்களை பூர்த்தி செய்வதற்கான சிறப்பு உதவி மையங்கள்

இன்றும், நாளையும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெறுகிறது.

திருச்சி மற்றும் வேலூர் மாவட்டத்தின் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் செயல்படும் இம்முகாமில் ஏராளமான வாக்காளர்கள் தங்களது படிவங்களை வழங்கி வருகின்றனர்.

மாநிலம் முழுவதும் இன்று நடைபெறும் சிறப்பு முகாம்களில் வாக்காளர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருவதால் மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த உதவி மையங்களில் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகளுக்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆயிரத்து 52 வாக்குச்சாவடி மையங்களில் இப்பணிகளுக்காக 107 மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுவினரின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சி விற்பனையை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் மதுரையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி பொருட்களுக்கு தேசிய அளவிலான சந்தை

வாய்ப்புகளை உறுதிசெய்யும் வகையில் தமுக்கம் மைதானத்தில் இன்று தொடங்கி 12 நாட்களுக்கு இக்கண்காட்சி நடைபெறுகிறது.

திண்டுக்கல், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் பிரத்யேக உணவுகளை பறைசாற்றும் உணவுத் திருவிழாவும் இதில் இடம்பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

ஆசிரியர் தகுதித்தேர்வு தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பை அடுத்து சீராய்வு மனு தாக்கல் செய்வது குறித்து மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முதலமைச்சருடன் சென்னையில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்தில் ஆசிரியர்களின் நலன்களை காப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

கீதாஜீவன்

தூத்துக்குடி மாவட்டம் அய்யனடைப்பு கிராமத்தில் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் 20 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட 220 அடுக்குமாடி குடியிருப்புகளை மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் இன்று திறந்து வைத்தார்.

தொடர்ந்து 120 பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளையும் அவர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

நெல்லை வாய்ஸ்

நெல்லை மாவட்டம் சேரன் மகாதேவியில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்ததால் 780 ஏக்கரில் நடவு செய்யப்பட்டிருந்த 2 லட்சத்திற்கும் அதிகமான வாழைகள் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டம் இலந்தக்குடிபட்டி கண்மாய் பகுதியில் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் குஞ்சுகளை நீரில் விடும் திட்டத்தை ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

தெற்கு அந்தமான் கடற்பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து நாளைமறுநாள் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று இம்மையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்ககடலில் இது மேலும் தீவிரமடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டிக்கு இந்தியாவின் லக்ஷ்யாசென் முன்னேறியுள்ளார்

அரையிறுதி ஆட்டத்தில் லக்ஷ்யாசென் - தைவானின் Tien Chen Chou-வை 17-21, 24-22, 21-16 என்ற செட்களில் வென்றார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

குஹாட்டியில் இந்தியாவிற்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாளான இன்று தென்னாப்பிரிக்கா தனது முதல் இன்னிங்சில் உணவு இடைவேளையின் போது 2 விக்கெட் இழப்பிற்கு 156 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖